# <u>அடிக்கடி எழுப்பப்படும் வினாக்கள் (FAQs)</u>

## <u>பொது</u>

1. நான் பதிவு செய்ய வேண்டிய தேவை என்ன?

கையடக்க தொலைபேசி சந்தாதாரர்கள் அனைவரும் தத்தமது வலையமைப்புடன் பதிவு செய்து கொள்ளல் வேண்டுமென்றும், பாதுகாப்பு படையினரால் அல்லது பொலீஸ் உத்தியோகத்தர்களினால் வேண்டப்படுமிடத்து அவர்கள் தம்வசமுள்ள SIM-இன் உரிமையை நிருபிக்க வேண்டும் என்றும் இலங்கைத் தொலைத்தொடர்பாடல் ஒழுங்குறுத்து ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

2. பதிவு/மீள் பதிவு செய்வதற்கு நான் கொடுப்பனவு செய்ய வேண்டுமா ?

இல்லை

## செயல்முறை

பதிவு / மீள்பதிவு செய்ய நான் எவற்றைக் கொண்டுவர வேண்டும்?

நீங்கள் ஒரு புதிய சந்தாதாரராகவிருப்பின் பின்வரும் ஆவணங்களை கொண்டு வரவேண்டும்.

அ) தேசிய அடையாள அட்டை /இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

ஆ) வாடிக்கையாளர் எமது நிலையத்தில் புகைப்படமெடுக்க விரும்பாவிடின் கடவுச்சீட்டு விவரக்கூற்றினை அனுசரித்து (3.5 செ.மி. X 4.5 செ.மி.) சமீபத்திய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்.

இ) பிற்கொடுப்பனவு குரல்வழி தொடர்புகளுக்கான அல்லது அகன்றபட்டைத் தொடர்புகளுக்கான அறவீட்டுப் பட்டியலின் உறுதிச் சான்று.

ஈ) கம்பனிக்கான தொடர்புகளுகளாயின் கம்பனியின் கடிதம்.

3. தற்பொழுது நீங்கள் சந்தாதாரராக இருப்பின் பின்வருவனவற்றை நீங்கள் எடுத்துவர வேண்டும்.

   1) உங்கள் வசமுள்ள மொபிடெல் SIM/SIMகள்
   2) தேசிய அடையாள அட்டை/இலங்கை வாகன சாரதி அனுமதிப்பத்திரம்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி ஒன்று.
   3) கடவுச்சீட்டின் விவரக்குறிப்புகளுக்கு இணங்கியதான (3.5 செ.மி. X 4.5 செ.மி.) அளவு கொண்ட சமீபத்திய வர்ணப்புகைப்படம் அல்லது எமது நிலையத்தில் கட்டணமின்றி படமெடுக்கவும் முடியும்.

4) பிற்கொடுப்பனவு குரல்வழி தொடர்புகளுக்கான அல்லது அகன்றபட்டைத் தொடர்புகளுக்கான அறவீட்டுப் பட்டியலின் உறுதிச் சான்று.
5) கம்பனிக்கான கீழ்வரும் தொடர்புகளு கம்பனியின் கடிதம்.

குறிப்பு :

உங்களிடம் தே.அ.அ இல்லையெனில் உங்கள் பெற்றோருடன்/பாதுகாவலருடன் வருதல்வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோரின் /பாதுகாவலரின் 1-3 வரையுள்ள ஆவணங்களையும் கொண்டு வருதல்வேண்டும்.

மேலே 22-இற்கு இணங்கியதான சமீபத்திய புகைப்படம் உங்களிடம் இல்லையாயின், எமது நிலையத்தில் கட்டணமின்றி புகைப்படம் ஒன்றை எம்மால் எடுக்க முடியும்.

4. எங்கு பதிவு செய்து கொள்ளலாம்?

புதிய மற்றும் தற்போதைய சந்தாதாரர்கள் அனைவரும் பின்வரும் நிலையங்களில் பதிவு மற்றும் மீள்பதிவு செய்யலாம்.

- மொபிடெல் கிளைகள்
- SLT ரெலிகொம்
- SLT பிராந்திய தொலைத்தொடர்பாடல் அலுவலகங்கள்
- சிங்கர் மெகா
- தெரிவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கபட்ட மொபிடெல் முகவர் நிலையங்கள்
- ஆர்ப்பிகோ சுப்பர் சென்ரர், ஹைட் பார்க் கோனர்.

5. நான் பதிவு செய்த பின்பு எனக்கு அறிவிக்கப்படுமா?

ஆம். பதிவு வெற்றிகரமாக நிறைவேறியபின், SMS மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

6. பதிவு செய்வதன்மீது சான்றிதழ் ஒன்று எனக்கு கிடைக்குமா?

ஆம். பதிவு செய்தவுடன் தற்காலிக மொபிடெல் அடையாள சான்றிதழ் உங்களுக்கு கிடைக்கும். அதன் பின்னர், உங்கள் நிரந்தர மொபிடெல் அடையாள சான்றிதழ் உங்கள் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

7. நான் தற்சமயம் பிரயோகிக்கும் SIM-இன் மொபிடெல் டிஜிடல் சான்றிதழை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் ?

டயல் செய்க #132# SEND

- கையடக்கத் தொலைபேசி இல
- பெயர்
- தே.அ.அ இல
- SIM இலக்கம்

ஆகியவை உங்களுக்கு கிடைக்கும்.

<u>பல்லினம்</u>

8. எனது தேசிய அடையாள அட்டை/இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்/செல்லுபடியாகும் கடவுச்சீட்டில் காணப்படும் முகவரியிலிருந்து எனது தற்போதைய முகவரி மாறுபடுமானால் என்ன நடக்கும்?

அதுபற்றி அலட்டிக் கொள்ள வேண்டாம். நீங்கள் தற்போது வாழும் முகவரி கொண்டு, உங்கள் SIM ஐ பதிவுசெய்ய முடியும்.

9. நான் ஒரு இலங்கையர் அல்லா் நானும் பதிவு செய்ய வேண்டுமா ?

ஆம். மேலுள்ள 3-இல் காணப்படும் அதே செயல்முறையை நீங்களும் பின்பற்ற வேண்டும்.

10. நான் கொள்வனவு செய்த இடத்தைவிட வேறு இடத்தில் SIM-ஐ நான் பதிவு செய்ய முடியுமா?

ஆம். மேலே 4-இல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு இடத்திலும் பதிவு செய்யலாம்.

11. என் சார்பில் வேறொருவா் மூலம் எனது SIM ஐ பதிவு செய்ய முடியுமா ?

முடியாது. அடையாளத்தை உறுதிப்படுத்த நீங்கள் நேரில் வரத்தான் வேண்டும்.

12. என்னிடம் பல மொபிடெல் ளுஐஆகள் உண்டு. அவை எல்லாவற்றையும் பதிவு செய்ய வேண்டுமா?

உங்கள் பெயரில் பல SIM கள் பதிவு செய்யப்பட்டிருப்பின், நீங்கள் தற்போது சகலவற்றையும் பயன்படுத்தாது இருக்க வாய்ப்புண்டு.

அத்தகைய SIM கள் வேறு ஆட்களால் பயன்படுத்தப்படுமாயின் அவா்களின் பெயா்களில் அவற்றை பதிவு செய்து கொள்ளுமாறு அவா்களிடம் தயவுசெய்து கேட்டுக் கொள்ளுங்கள். எவ்வாறாயினும், நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட SIM -ஐ

சிற்சில காரணங்களுக்காக எப்பொழுதும் கொண்டு செல்வதாக இருந்தால், அவை ஒவ்வொன்றையும் வெவ்வேறாக பதிவு செய்தாக வேண்டும்.

13. நான் ஒரு வலையமைப்புடன் ஏற்கெனவே பதிவு செய்துள்ளேன். எனது மொபிடெல் இணைப்புக்காக மொபிடெல்லுடன் பதிவு செய்துகொள்ள வேண்டுமா ?
ஆம். உங்கள் மொபிடெல் இணைப்புக்கு மொபிடெல்லுடன் நீங்கள் பதிவு செய்து கொள்ளவேண்டியது அவசியம்.

14. பதிவு செய்யப்பட்ட எனது SIM –ஐ இழந்துவிட்டேன். எனது புதிய SIM –ஐ மீள்பதிவு செய்ய வேண்டுமா?

இல்லை. உங்கள் முன்னைய இலக்கம் பற்றிய உங்கள் பதிவுத்தகவல் எமது வலையமைப்பில் ஏற்கெனவே கிடைக்கக் கூடியதாக இருப்பதனால், உங்கள் SIM அதே இலக்கத்துக்காயின் நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. எனினும் புது MIC ஐ பெற்றுக்கொள்ள எமது நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

**<u>பதிவு செய்யாதவிடத்து ஏற்படும் விளைவுகள்</u>**

இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிமுறைப்படி ஒவ்வொரு சந்தாதாரரும் கட்டாயமாக பதிவு செய்தாக வேண்டும். எந்த ஒரு சந்தாதாரரும் தாம் கொண்டு செல்லும் SIM-இல் தனக்குரிய உரிமையை உறுதிப்படுத்த தவறுமிடத்து, நாட்டின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ளாமைக்காக குற்றம் சாட்டப்படும்.